**வட மாகாண வீதி புனரமைப்புச் செயற்திட்டம் (நாவற்குழி – காரைதீவு- மன்னார் வீதியின் 67 கிலோமீற்றர் புனரமைப்பு) 2014**

வட மாகாண வீதி புனரமைப்பு செயற்திட்டத்தின் (நாவற்குழி – காரைதீவு- மன்னார் வீதியின் 67 கிலோமீற்றர் புனரமைப்பு) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய பீஎல்ஏ-201111 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் நிறைவேற்றல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. நாவற்குழி–காரைதீவு-மன்னார் வீதியின் 63 கிலோமீற்றரை புனரமைப்பது செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் ஒப்பந்த பெறுமதி ஐ.அ.டொலர் 56.9 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 48.3 மில்லியன் அல்லது 85 சதவீதம் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைகள் 2011 நவம்பர் 10 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2014 மே 09 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பின்னர் 2014 மே 12 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால்

பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டு பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 23.99 மில்லியன் விசேட கடன் புறம்பாக பதியப்பட்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் உடனடி நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டிலும் தொடர்ந்திருந்தது.

(அ) பொது முயற்சிகள் திணைகக்களத்தின் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.39 மற்றும் 8.6 ஆம் பிரிவுகளிற்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் ரூபா 758,439 தொகையான மேந்தலைக் கிரயத்தின் அறவீடு மற்றும் செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தருக்கு ரூபா 629,104 ஆன மிகையூதியங்கள் மற்றும் மருத்துவப் படிகளின் கொடுப்பனவு.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக, செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களின் வேதனங்களை கணிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட சூத்திரத்தின் பிரயோகம்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2014 திசெம்பர் 31 வரையும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | பயன்படுத்திய நிதிகள் 2014 ஆண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தியவை | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி | 48.3 | 6,532.5 | 22.92 | 2,996.71 | 42.55 | 5,490.26 |
| இலங்கை அரசாங்கம் | 8.6 | 1,289.8 | 0.40 | 52.92 | 8.98 | 1,226.18 |
| | 56.9 | 7,822.3 | 23.32 | 3,049.63 | 51.53 | 6,716.44 |

### 3.2. பௌதீக செயலாற்றல்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதிகளின் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 51.2 கிலோமீற்றரில் ஜெயபுரம் சந்தியில் மற்றும் வீதியின் 67.5 கிலோமீற்றரில் மூன்றம்பிட்டி சந்தியில் வலது பக்கத்தில் கிளை பாதைக்கு அவசியமான மதிப்பீடுகள் வழங்கப்பட்டிருக்காமை கணக்காய்வாளரால் செய்யப்பட்ட களப்பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், செவ்ரோன் வீதி அடையாளப் பலகை முழங்காவில் சந்தியில் அபாயகரமான வளைவில் பொருத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், மாந்தைக்குல்லாறு, பாலியாறு மற்றும் கல்லியடியில் 03 பாலங்கள் ஆரம்ப மட்டத்தில் வேலைகள் இனங்காணப்பட்டிருக்காதமையால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பூர்த்தியாக்கல் கட்டத்தில் நிலுவையாகவிருக்கின்ற வேலைகள் மற்றும் இனங்காணப்பட்ட குறைபாட்டு வேலைகளில் சில குறைபாடு பொறுப்பு காலத்தின் இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இதன்விளைவால், குறைபாட்டுப் பொறுப்புக் காலம் 2015 நவம்பர் 15 வரை 6 மாதங்களால் நீடிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்த நிபந்தனையின் 13.6 ஆம் உட்பிரிவின் பிரகாரம், சிறிய அல்லது இடைநேர் தன்மையிலுள்ள வேலைகளிற்காக நாள் வேலை அடிப்படையில் முரண்கள் நிறைவேற்றப்பட வேண்டியதுடன் ரூபா 729,900 தொகையான ஏற்பாடுகள் அவற்றின் அளவீட்டுப் பட்டியல்களில் செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட பூர்த்தியாக்கல் கூற்றின் பிரகாரம், ஆரம்ப ஒதுக்கீட்டில் 231 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1.68 மில்லியன் பெறுமதியான வேலை முரண்கள் மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளை விஞ்சி நாள் வேலை அடிப்படையின் கீழ் கோரப்பட்டிருந்தது. மேலும், அத்தகைய சில வேலைகள் சிறிய அல்லது இடைநேர் தன்மையில் இருக்காததுடன் சாதாரண முரண் கட்டளைகள் அந்த முரணங்களிற்காக உயர்த்தப்பட்டிருக்கவில்லையென வெளிப்பட்டது.

(இ) ஒப்பந்த உடன்படிக்கையின் பொது நிபந்தனையின் 14.9 ஆம் உட்பிரிவிற்கு முரணாக, 2014 செப்தெம்பர் 04 இல் ஒப்பந்தத்தின் குறைபாட்டு பொறுப்புக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் ரூபா 163.31 மில்லியன் தொகையான பிடிகாசின் ஒரு பகுதி வங்கி உத்தரவாதங்களை ஏற்றுக்கொண்டு 2014 யூன் 26 இல் செயற்திட்டத்தால் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்த உடன்படிக்கையால் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட நிதிகளில் சிவில் ஒப்பந்தகாரர்கள் அல்லது ஆலோசனையாளர்களால் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் செயற்திட்டத்தின் சொத்துக்களாக கருதப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், கடன் பெறுகைகளில் ஒப்பந்தகாரரால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள், உபகரணங்கள், தளபாடங்கள் போன்ற சொத்துக்களின் பெறுமதி புறம்பாக பதியப்பட்டு செயற்திட்டத்தின் கணக்கேடுகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மே 15 இல் செய்யப்பட்ட இறுதி இடைக்கால கொடுப்பனவு சான்றிதழின் பிரகாரம், ஒப்பந்தத்தின் மொத்தக் கிரயம் அளவீட்டு பட்டியலில் ரூபா 1,871 மில்லியன் மதிப்பிடப்பட்ட போதிலும் ரூபா 1,311.69 மில்லியனாகும். ஆதலால், வீதி வேலைகளின் புனரமைப்பிற்காக நெகிழ்ச்சியான மதிப்பீடுகள் செய்யப்பட்டிருக்காததுடன் ரூபா 168 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் நெகிழ்ச்சியான கிரய மதிப்பீடுகளின் அடிப்படையில் மேலதிகமாக செலுத்தப்பட்டது எனபதைக் காட்டுகிறது.

(ஆ) வடிவமைத்தல் கட்டத்தில் வீதி வேலைகள் மீதான விரிவான புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அதவானிக்கப்பட்டது. இதன் விளைவால், சில வீதிப்பகுதிகள் மழை காரணமாக வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டதுடன் உடனடி நடவடிக்கையாக, ரூபா 527.5 மில்லியன் பெறுமதியான முரண் கட்டளைகள் கிளை வீதிகளை கரையேற்றுவதற்கு வழங்கப்பட்டது என பின்னர் உணரப்பட்டது. மேலும், வீதியின் அகலம் மேற்குறிப்பிட்ட முரண் கிரய அதிகரிப்பைக் குறைப்பதற்கு மூல அளவீட்டுப் பட்டியலில் குறிப்பிடப்பட்டவாறு 10.2 மீற்றரிலிருந்து 9.0 மீற்றரிற்கு குறைக்கப்பட்டிருந்தது.